# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 66/மா/2026
நாள்:24.07.2026

T. ஈவன்ஸ்,
சென்னை–600 050. --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–7,
பெருநகர சென்னை மாநகராட்சி.
(2) S.K. பூபதி, பாடி,
சென்னை–600 050. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 050, பாடி, சீனிவாச நகர், காமராஜ் முதல் குறுக்கு தெரு, கதவு எண் 21/14B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T. ஈவன்ஸ் என்பவரின் 19.02.2026 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.02.2026 அன்று பெறப்பட்டு 66/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 050, பாடி, சீனிவாச நகர், காமராஜ் முதல் குறுக்கு தெரு, கதவு எண் 21/14B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T. ஈவன்ஸ் என்பவர் தனது 19.02.2026 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நாங்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் குடும்பமாக வசித்து வருகிறோம். எனக்கு ரோட்டில் 10 $^1/_2$ அடி மட்டுமே முன்புறம் உள்ளது. எனது பக்கத்து வீட்டுக்காரர் திரு. பூபதி (செல் எண் 9791554064) என்பவருக்கு 25 அடி முன்புறம் உள்ளது. எனது இந்த சிறிய முன்புற வழியாக எங்களது கார் மற்றும் இருசக்கர வாகனங்களை வீட்டுக்குள்ளே பார்க்கிங் செய்வது வழக்கம். இதனால் அவர் பொறாமை கொண்டு எங்கள் கார் உள்ளே செல்ல முடியாவண்ணம் ரோட்டில் 4 அடி நீளம் சுவர் கட்டுதல், ரோட்டில் ரப்பீஸ் கொட்டி வைத்தல் மற்றும் தற்போது ஒரு கழிவு நீர் குழாயை ரோட்டில் அமைத்து ஒரு இரும்பு சீற்றால் மூடுதல் மற்றும் தற்போது ரோட்டில் கான்கிரீட் பில்லர் அமைத்து வீடு கட்டி வருகிறார். இது குறித்து உதவி பொறியாளர், மண்டல அலுவலர், சென்னை மாநகராட்சி, முதலமைச்சர் தனிப்பிரிவு, இணை ஆணையாளர், செனாய் நகர் அவர்களுக்கும் புகாரளித்தும் எதுவும் இன்று வரை அகற்றப்படாமலுள்ளது. ஆகவே ஐயா அவர்கள் மேற்குறிப்பிட்ட ரோட்டை ஆக்கிரமிப்பு செய்தல், ரோட்டில் கான்கிரீட் பில்லர் அமைத்து வீடு கட்டுதல், ரோட்டில் கழிவுநீர் குழாயை செங்குத்தாக அமைத்தல், ரோட்டில் இரும்பு சீற்றால் எங்கள் வீட்டின் முன்புறம் வெல்டிங் செய்து நிரந்தரமாக மறைத்தல் மற்றும் ரோட்டில் ரப்பீஸ் கொட்டி

வைத்தல் – இவற்றை நிரந்தரமாக அகற்றி தந்து சாலையில் குடிநீர் மற்றும் கழிவுநீர் லாரிகள் வந்து செல்லவும், ஆம்புலன்ஸ் சேவைகள் தடையின்றி போகவும் ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 30.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் இணை இயக்குநர்/உதவி ஆணையர் தனது 29.04.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, அம்பத்தூர் பகுதி 20, கோட்டம்–89, கதவு எண் 21/14B, காமராஜர் முதல் குறுக்கு தெரு, சீனிவாச நகர், பாடி, சென்னை–600 050 என்ற முகவரியில் உள்ள திரு. பூபதி என்பவரின் கட்டிடம் சாலையினை ஆக்கிரமிப்பு செய்து அமைத்து கொண்டிருப்பதாக திரு. T. ஈவன்ஸ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்துள்ளார்.

அதன் பொருட்டு மேற்கண்ட திரு. T. ஈவன்ஸ் என்பவர் 22.12.2025 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிரிவில் புகார் அளிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பெறப்பட்ட புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இந்த கட்டிடத்திற்கு 24.12.2025 அன்று ULB Act 2023 விதிகளின்படி நகரத்திட்டமிடல் அமலாக்கம் (படிவம் I) (Town Planning Enforcement (Form-I) Notice for Production of Document) ஆவணத்தைச் சமர்ப்பிப்பதற்கான அறிவிப்பு தாக்கீதினை திரு. பூபதி என்பவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. திரு. பூபதி என்பவர் தனது கட்டிடத்தில் எவ்வாறு கட்டப்பட்டுள்ளதோ அதே போலவே திரு. T. ஈவன்ஸ் அவர்களின் கட்டிடமும் கட்டப்பட்டுள்ளது எனவும், அவருடைய கட்டிடத்தையும் சரிபார்த்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அவரது புகார் மனுவில் தெரிவித்துள்ளார். மேலும் 05.01.2026 அன்று ULB Act 2023 விதிகளின்படி நகரத்திட்டமிடல் அமலாக்கம் (படிவம் II) (Town Planning Enforcement (Form-II) Notice for Inspection) திரு. T. ஈவன்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்டு ஆய்வின் போது திரு. பூபதி என்பவர், அவருடைய கட்டிடம் கட்டப்பட்டு 20 ஆண்டுகள் மேல் ஆனதால் சிறு சிறு பராமரிப்பு மற்றும் எனது கட்டிடத்தில் கார் பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தினால் கட்டிடத்தில் உள்ள தரைதளத்தில் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பிற்காக கட்டிடத்தின் முன் தூண் (Column) தன்னுடைய இடத்தில் அமைத்துள்ளேன் மற்றும் தூண் (Column) அமைக்கப்பட்ட இடம் தன்னுடைய பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் உள்ள அளவுகளின்படி உள்ளது என வாய்மொழியாக தெரிவித்து பத்திர நகலினை அலுவலகத்தில் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார். ஆனால் இதுநாள் வரை ஆவணங்கள் ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ல் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 31.01.2026 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது இக்கட்டிடம் 20 ஆண்டுகள் மேல் உள்ளதாக கண்டறியப்பட்டது. எனவே இந்த கட்டிடத்தின் கட்டமைப்பு நிலைத் தன்மை சான்று (Building Stability Certificate) பொதுப் பணித் துறை அல்லது அண்ணா பல்கலைக் கழகத்தில் பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7–ல் வழங்குமாறு திரு. பூபதிக்கு 31.01.2026 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் காமராஜர் முதல் குறுக்கு தெருவின் நீளம் 127.00 மீட்டர் மற்றும் அகலம் சராசரியாக 5.00 மீட்டர் ஆக உள்ளது. திரு. T. ஈவன்ஸ் என்பவர் புகார் அளிக்கப்பட்ட கட்டிடத்தின் முன் அகலம் 5.00 மீட்டர் ஆக உள்ளது என கண்டறியப்பட்டது.

அதன் பின் திரு. பூபதி என்பவர் ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படாமல் பணியினை தொடர்ந்து செய்ததால் 07.01.2026 மற்றும் 06.02.2026 ஆகிய தேதிகளில் ஆய்வாளர், சட்டம் மற்றும் ஒழுங்கு T3 காவல் நிலையம், TNEB காலனி, TVS இண்டஸ்ட்ரீஸ், கொரட்டூர், சென்னை–600 080 அவர்களிடமும் புகார் அளிக்கப்பட்டது. இது தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் கள ஆய்வு மேற்கொண்டு, கட்டிடம் தொடர்பான புகார் என்பதால் பெருநகர சென்னை மாநகராட்சி விதிகளின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு காவல் உதவி ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள கட்டிடம் சாலையை ஆக்கிரமித்து தூண் (Column) அமைத்து வருவதால் கள ஆய்வு மேற்கொண்டு எல்லைகளை நிர்ணயம் செய்து கட்டிடத்தின் அளவீடு மற்றும் குறியீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வட்டாட்சியர் அம்பத்தூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அம்பத்தூர் அவர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டபின் அந்த அறிக்கையின்படி கட்டிடத்தின் மீது ULB Act 2023 விதிகளின்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்பமை முறைமன்ற நடுவத்தின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.''.

4. மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 07.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 03.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“நான் மேற்குறிப்பிட்ட முகவரியில் குடும்பமாக வசிக்கிறேன். எனக்கு ரோட்டில் 10 $^1/_2$ அடி மட்டுமே முன்புறம் உள்ளது. எனது பக்கத்து வீட்டுக்காரர் திரு. பூபதி என்பவருக்கு 25 அடி முன்புறம் உள்ளது. எனது இந்த சிறிய முன்புற வழியாக எங்களது கார் மற்றும் இருசக்கர வாகனங்களை வீட்டுக்குள்ளே பார்க்கிங் செய்வது வழக்கம். எங்கள் கார் உள்ளே செல்ல முடியாவண்ணம் ரோட்டில் 4 அடி நீளம் சுவர் கட்டுதல், ரோட்டில் ரப்பீஸ் கொட்டி வைத்தல் மற்றும் தற்போது ஒரு கழிவு நீர் குழாயை ரோட்டில் அமைத்து ஒரு இரும்பு ஷீட்டால் மூடியும், ரோட்டில் கான்கிரீட் பில்லர் அமைத்தும் வீடு கட்டி வருகிறார். இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ல் புகாரளித்தும் எதுவும் இன்று வரை அகற்றப்படாமல் உள்ளது. ஆகவே மேற்குறிப்பிட்ட இவ்வாக்கிரமிப்பினை நிரந்தரமாக அகற்றி தந்து சாலையில் குடிநீர் மற்றும் கழிவுநீர் லாரிகள் வந்து செல்லவும், ஆம்புலன்ஸ் சேவைகள் தடையின்றி போவதற்கு உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.''

6. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் இளநிலைப் பொறியாளர் 03.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, அம்பத்தூர் பகுதி 20, கோட்டம் 89, கதவு எண் 21/14B, சென்னை 50, பாடி, சீனிவாச நகர், காமராஜ் முதல் குறுக்கு தெரு, என்ற முகவரியில் உள்ள திரு. பூபதி என்பவரின் கட்டிடத்திற்கு 24.12.2025 அன்று ULB Act 2023 விதிகளின்படி நகரத்திட்டமிடல் அமலாக்கம் (படிவம் I) (Town Planning Enforcement (Form-I) Notice for Production of Document) ஆவணத்தைச் சமர்ப்பிப்பதற்கான அறிவிப்பு தாக்கீதினை திரு. பூபதி என்பவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. திரு. பூபதி என்பவர் தனது கட்டிடம் எவ்வாறு கட்டப்பட்டுள்ளதோ அதே போலவே திரு. T. ஈவன்ஸ் அவர்களின் கட்டிடமும் கட்டப்பட்டுள்ளது

எனவும், அவருடைய கட்டிடத்தையும் சரிபார்த்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அவரது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

மேலும் 05.01.2026 அன்று ULB Act 2023 விதிகளின்படி நகரத்திட்டமிடல் அமலாக்கம் (படிவம் II) (Town Planning Enforcement (Form-II) Notice for Inspection) திரு. T. ஈவன்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்டது. ஆய்வின் போது திரு. பூபதி என்பவர், அவருடைய கட்டிடம் கட்டப்பட்டு 20 ஆண்டுகள் மேல் ஆனதால் சிறு சிறு பராமரிப்பு, கார் பார்க்கிங் வசதி தரைதளத்தில் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பிற்காக கட்டிடத்தின் முன் தூண் (Column) தன்னுடைய இடத்தில் பத்திர அளவுகளின்படி அமைத்துள்ளதாக தெரிவித்தார். ஆனால் இதுநாள் வரை ஆவணங்கள் ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ல் சமர்ப்பிக்கப்படவில்லை.

மனுதாரர் திரு. ஈவன்ஸ் மற்றும் திரு. பூபதி ஆகியோரின் கட்டிடங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்து கட்டிடத்தின் அளவீடு மற்றும் குறியீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வட்டாட்சியர் அம்பத்தூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அம்பத்தூர் அவர்களிடமிருந்து அறிக்கை பெறப்பட்டபின் அந்த அறிக்கையின் அடிப்படையில் கட்டிடத்தின் மீது ULB Act 2023 விதிகளின்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''.

7. இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. S.K.பூபதி என்பவர் 03.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது வீடு 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட வீடாகும். எனவே, எனது வீட்டில் சிறுசிறு பராமரிப்பு மற்றும் எனது கட்டிடத்தில் கார் பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தினால், கட்டிடத்தில் உள்ள தரை தளத்தில் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பிற்காக பத்திரத்தில் உள்ள அளவுகளின்படி கட்டிடத்தின் முன் எனது இடத்திலேயே, தூண் அமைத்துள்ளேன். நான் பெருநகர சென்னை மாநகராட்சி இடத்தினை எந்தவிதத்திலும் ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் இணை இயக்குநர் / உதவி ஆணையரின் அறிக்கை, இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை–600 050, பாடி, சீனிவாச நகர், காமராஜ் முதல் குறுக்கு தெரு, கதவு எண் 21/14B என்ற முகவரியில் வசித்து வரும் மனுதாரரின் வீட்டிற்கு முன்பு உள்ள ரோடு 10 $^{1}/_{2}$ அடி உள்ளது என்பதும், தனது பக்கத்து வீட்டுக்காரர் திரு. பூபதி என்பவரின் வீட்டிற்கு முன்புறம் 25 அடி உள்ளது என்பதும், தனது வீட்டிற்குள்ளே தங்களது கார் மற்றும் இருசக்கர வாகனங்கள் பார்க்கிங் செய்யப்படுகிறது என்பதும், மனுதாரரின் பக்கத்து வீட்டுக்காரர், தங்கள் கார் உள்ளே செல்ல முடியாவண்ணம் ரோட்டில் 4 அடி நீளம் சுவர் கட்டியும், ரப்பீஸ் கொட்டியும் மற்றும் கழிவு நீர் குழாய் ஒன்றை ரோட்டில் அமைத்து இரும்பு ஷீட்டால் மூடியும், ரோட்டில் கான்கிரீட் பில்லர் அமைத்தும் வீடு கட்டப்படுகிறது என்பதும், இதுகுறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ல் புகாரளித்தும் எதுவும் அகற்றப்படாமல் உள்ளது என்பதும், மேற்குறிப்பிட்ட இவ்வாக்கிரமிப்பினை நிரந்தரமாக அகற்றி தந்து சாலையில் குடிநீர் மற்றும் கழிவுநீர் லாரிகள் வந்து செல்லவும்,

ஆம்புலன்ஸ் சேவைகள் தடையின்றி போவதற்கு உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, அம்பத்தூர் பகுதி 20, கோட்டம் 89–க்குட்பட்ட, மனுதாரரின் பக்கத்து வீட்டுக்காரரான சென்னை–600 050, பாடி, சீனிவாச நகர், காமராஜ் முதல் குறுக்கு தெரு, கதவு எண் 21/14B என்ற முகவரியில் உள்ள திரு. பூபதி என்பவரின் கட்டிடத்திற்கு 24.12.2025 அன்று ULB Act 2023 விதிகளின்படி நகரத்திட்டமிடல் அமலாக்கம் (படிவம் I) (Town Planning Enforcement (Form-I) Notice for Production of Document) ஆவணத்தைச் சமர்ப்பிப்பதற்கான அறிவிப்பு தாக்கீதினை அளிக்கப்பட்டது என்பதும், திரு. பூபதி என்பவர் தனது கட்டிடம் எவ்வாறு கட்டப்பட்டுள்ளதோ அதே போலவே மனுதாரரான திரு. T. ஈவன்ஸ் என்பவரின் கட்டிடமும் கட்டப்பட்டுள்ளது என்பதும், அவருடைய கட்டிடத்தையும் சரிபார்த்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனுவில் தெரிவித்துள்ளார் என்பதும், 05.01.2026 அன்று ULB Act 2023 விதிகளின்படி நகரத்திட்டமிடல் அமலாக்கம் (படிவம் II) (Town Planning Enforcement (Form-II) Notice for Inspection) திரு. T. ஈவன்ஸ் என்பவருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், ஆய்வின் போது மனுதாரரின் பக்கத்து வீட்டுக்காரர் திரு. பூபதி என்பவர் அவருடைய கட்டிடம் கட்டப்பட்டு 20 ஆண்டுகள் மேல் ஆனதால் சிறு சிறு பராமரிப்பு கார் பார்க்கிங் வசதி தரைதளத்தில் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பிற்காக கட்டிடத்தின் முன் தூண் (Column) தன்னுடைய இடத்தில் பத்திர அளவுகளின்படி அமைத்துள்ளதாக தெரிவித்தார் என்பதும், இதுநாள் வரை ஆவணங்கள் ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ல் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும், மனுதாரர் திரு. ஈவன்ஸ் மற்றும் மனுதாரரின் பக்கத்து வீட்டுக்காரர் திரு. பூபதி ஆகியோரின் கட்டிடங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்து கட்டிடத்தின் அளவீடு மற்றும் குறியீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அம்பத்தூர் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்பதும், அம்பத்தூர் வட்டாட்சியரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டபின், அதன் அடிப்படையில் மேற்கண்ட கட்டிடங்களின் மீது ULB Act 2023 விதிகளின்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் இணை இயக்குநர்/உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தனது வீட்டில் சிறுசிறு பராமரிப்பு பணி மற்றும் கட்டிடத்தில் கார் பார்க்கிங் வசதி இல்லாத காரணத்தினால், கட்டிடத்தில் உள்ள தரை தளத்தில் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பிற்காக பத்திரத்தில் உள்ள அளவுகளின்படி கட்டிடத்தின் முன் தனது இடத்திலேயே, தூண் அமைக்கப்பட்டது என்பதும், தான் பெருநகர சென்னை மாநகராட்சி இடத்தினை எந்தவிதத்திலும் ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனு குறித்து, மனுதாரர் திரு. ஈவன்ஸ் மற்றும் மனுதாரரின் பக்கத்து வீட்டுக்காரர் திரு. பூபதி ஆகியோரின் கட்டிடங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்து கட்டிடத்தின் அளவீடு மற்றும் குறியீடு செய்து, அம்பத்தூர் வட்டாட்சியரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டபின், அதன் அடிப்படையில் மேற்கண்ட கட்டிடங்களின் மீது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023–ன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் இளநிலைப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட இரண்டு கட்டிடங்கள் தொடர்பாக அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களின் அறிக்கையை விரைவாக பெற்று, அதனடிப்படையில் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழ் உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் இணை இயக்குநர்/உதவி ஆணையருக்கு

அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. T. ஈவன்ஸ்,
கதவு எண் 21/14B,
காமராஜ் முதல் குறுக்கு தெரு,
சீனிவாச நகர், பாடி,
சென்னை–600 050.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 7 அம்பத்தூர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
அம்பத்தூர்,
சென்னை–600 053.

(4) திரு. S.K. பூபதி,
கதவு எண் 21/14B,
காமராஜர் 1வது தெரு,
சீனிவாச நகர், பாடி,
சென்னை–600 050.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.